2010 ஏப்ரல் 7]

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய ஆணையை மீறி வெளியே அனுப்பப்பட்டவர்கள் உள்ளே வந்து முழக்கஞ்செய்கிற காரணத்தால் சட்டப் பேரவை நடவடிக்கையில் இருந்து தாங்கள் தீர்மானிக்கிற வகையில்...

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியேற்றச் சொல்கிறேன், அவைக் காவலர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். அவைக் காவலர்கள் உடனே வெளியேற்ற வேண்டும் என்று சொன்ன பிறகும் நீங்கள் பேசாமல் நின்றுகொண்டிருந்தால், கடமையைச் செய்யவில்லை என்று அர்த்தம். வெளியேற்றுங்கள். அவ்வளவு பேரையும், தூக்குங்கள்— (கூச்சல்—குழப்பம்) வெளியே தூக்கிக்கொண்டு போங்கள். உடனே வெளியேற்றுங்கள். (குறுக்கீடு) வெளியேற்றுங்கள். பிடித்துத் தள்ளிக் கொண்டு போவதுதானே? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) காவலர்களைத் தாக்கினால் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: திருச்செந்தூர் சட்டமன்ற இடைத் தேர்தலில் நான் போட்டியிடுகின்றபோது...

நண்பகல் 12—00

7. அரசினர் தீர்மானம்

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை 9–4–2010 வரை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 7

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று சட்டமன்றத்தில் அ.இ.அ.தி.மு.க.–வினர் வேண்டுமென்றே திட்டமிட்டு தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் பேசி முடித்தவுடன், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் பேசுகிறபோது தொடர்ந்து இடையூறு செய்ததால், தாங்கள் ஆணையிட்டு வெளியே செல்லுமாறு கேட்டுக்கொண்டதற்குப் பின்னரும், வெளியேற்றப்பட்டவர்கள், அதையும் மீறி திரும்பவும் உள்ளே வந்து குழுவாக அமர்ந்துகொண்டு மறியல் நடத்துவதுபோல தொடர்ந்து கூச்சல் எழுப்பிய காரணத்தால், அவர்கள் சட்டமன்றத்தை மதிக்காமல் நடந்து கொள்கிறார்கள், சட்டமன்றம் தொடர்ந்து நடைபெற விடாமல் திட்டமிட்டே இடையூறு செய்கிறார்கள். அப்படித் திட்டமிட்டுச் செய்கிற காரணத்தால் இன்றையதினம் அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அத்தனைபேரும் துணைத் தலைவரிலேயிருந்து, உறுப்பினர்கள் அத்தனைபேரும் வருகிற 9–4–2010 வெள்ளிக்கிழமை, இந்தப் பொது விவாதம் முடிகிற வரையில் தற்காலிகமாக அவையிலேயிருந்து நீக்கிவைக்கப்பட வேண்டும்."

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்து அவையின் கண்ணியத்தையும், மரபையும் மீறி அவைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட, இன்று அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் 9–4–2010 வரை நீக்கிவைக்கப்படுகிறார்கள்.

சத்யமேவ ஜயதே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS